# ஏப்ரல் - 12- பரிசுத்த வார புதன்

புனித யூலியஸ்

## முதல் வாசகம் : ஏசாயா50 – 4 – 9

நலிந்தவனை நல்வாக்கால் ஊக்குவிக்கும் அறிவை நான் பெற்றிட, ஆண்டவராகிய என் தலைவர், கற்றோனின் நாவை எனக்கு அளித்துள்ளார் காலைதோறும் அவர் என்னைத் தட்டி எழுப்புகின்றார் கற்போர் கேட்பது போல் நானும் செவிகொடுக்கச் செய்கின்றார். ஆண்டவராகிய என் தலைவர் என் செவியைத் திறந்துள்ளார் நான் கிளர்ந்தெழவில்லை விலகிச் செல்லவுமில்லை. அடிப்போர்க்கு என் முதுகையும், தாடியைப் பிடுங்குவோர்க்கு என் தாடையையும் ஒப்புவித்தேன். நிந்தனை செய்வோர்க்கும் காறி உமிழ்வோர்க்கும் என் முகத்தை மறைக்கவில்லை. ஆண்டவராகிய என் தலைவர் துணை நிற்கின்றார் நான் அவமானம் அடையேன் என் முகத்தைக் கற்பாறை ஆக்கிக் கொண்டேன் இழிநிலையை நான் அடைவதில்லை என்றறிவேன். நான் குற்றமற்றவன் என எனக்குத் தீர்ப்பு வழங்குபவர் அருகில் உள்ளார் என்னோடு வழக்காடுபவன் எவன்? நாம் இருவரும் எதிர் எதிரே நிற்போம் என்மீது குற்றஞ்சாட்டுபவன் எவன்? அவன் என்னை நெருங்கட்டும். இதோ, ஆண்டவராகிய என் தலைவர் எனக்குத் துணைநிற்கின்றார் நான் குற்றவாளி எனத் தீர்ப்பிட யாரால் இயலும்? அவர்கள் அனைவரும் துணியைப் போல் இற்றுப்போவார்கள் புழுக்கள் அவர்களை அரித்துவிடும்.

**பதில்பாடல் :** கடவுளே உமது பேரன்பின் பெருக்கினால் எனக்குப் பதில் மொழி தாரும்

## நற்செய்தி : மத்தேயு 26 : 14 – 25

அக்காலத்தில் பன்னிருவருள் ஒருவனாகிய யூதாசு இஸ்காரி யோத்து தலைமைக் குருவிடம் வந்து, "இயேசுவை உங்களுக்கு நான் காட்டிக்கொடுத்தால் எனக்கு என்ன தருவீர்கள்?" என்று கேட்டான். அவர்களும் முப்பது வெள்ளிக் காசுகளை எண்ணி அவனுக்குக் கொடுத்தார்கள். அதுமுதல் அவன் அவரைக் காட்டிக் கொடுப்பதற்கு வாய்ப்புத் தேடிக்கொண்டிருந்தான். புளிப்பற்ற அப்ப விழாவின் முதல் நாளில் சீடர்கள் இயேசுவை அணுகி வந்து, "நீர் பாஸ்கா விருந்துண்ண நாங்கள் எங்கே ஏற்பாடு செய்ய வேண்டும் என விரும்புகிறீர்?" என்று கேட்டார்கள். இயேசு அவர்களிடம், "நீங்கள் புறப்பட்டு நகருக்குள் சென்று இன்னாரிடம் போய், "எனது நேரம் நெருங்கி வந்து விட்டது என் சீடர்களோடு உம் வீட்டில் பாஸ்கா கொண்டாடப் போகிறேன்" எனப் போதகர் கூறுகிறார் எனச் சொல்லுங்கள் "என்றார். இயேசு தங்களுக்குப் பணித்த படியே சீடர்கள் செயல்பட்டுப் பாஸ்கா விருந்துக்கு ஏற்பாடு செய்தார்கள். மாலை வேளையானதும் அவர் பன்னிருவரோடும் பந்தியில் அமர்ந்தார். அவர்கள் உண்டுகொண்டிருந்த பொழுது அவர், "உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார். அப்பொழுது அவர்கள் மிகவும் வருத்தமுற்றவர்களாய், "ஆண்டவரே, அது நானோ?" என ஒவ்வொருவரும் அவரிடம் கேட்கத் தொடங்கி னார்கள். அதற்கு அவர், "என்னுடன் பாத்திரத்தில் தொட்டு உண்பவனே என்னைக் காட்டிக் கொடுப்பான். மானிட மகன், தம்மைப் பற்றி மறைநூலில் எழுதியுள்ளபடியே போகிறார். ஆனால், ஐயோ! அவரைக் காட்டிக் கொடுக்கிறவனுக்குக் கேடு அம்மனிதன் பிறவாதிருந்தால் அவனுக்கு நலமாயிருந்திருக்கும்" என்றார். அவரைக் காட்டிக் கொடுத்த யூதாசும் "ரபி, நானோ?" என அவரிடம் கேட்க இயேசு, "நீயே சொல்லிவிட்டாய்" என்றார்.

**தியானம்:** இன்றைய தியான வாசகங்கள் இயேசுவோடு ஒன்றாக இருந்து உண்டு, குடித்த யூதாஸ் முப்பது வெள்ளிக் காசுக்காக இயேசுவைக் காட்டிக்கொடுக்கின்றான். அவரும் தந்தையின் சித்தம் எதுவோ அவற்றின்படியே நிகழ்கின்றன என்பதை ஏற்றுக்கொண்டவராய் பலவிதமான துன்பங்கள், அவமானங்கள், பழிச்சொற்கள் யாவற்றையும் ஏற்றுக்கொண்டார். இவற்றை சிந்தித்து எமது வாழ்க்கை முறையை மாற்றியமைக்க இன்றைய வாசகங்கள் எங்களை அழைத்து நிற்கின்றது. காரணம் நாங்கள் வாழும் சமூகத்தில் பலவிதமான மனிதர்களை சந்திக்கின்றோம். ஏனென்றால் அன்புடன் பழகி உதவி புரிபவர்களும் உண்டு, மற்றவர்கள் பார்க்க வேண்டும் உள்ளொன்று வைத்து வெளிவேடமாக வாழ்பவர்கள் உண்டு, தங்களை வெளிப்படுத்தாமல் உதவி புரியும் மனநிலை கொண்டவர்களும் உண்டு சிந்திப்போம். எத்தனை பேர் யூதாஸைப் போன்று ஒன்றாக இருந்து மற்றவர்களுக்கு பழிச்சொற்களை பேசி அசிங்கப்படுத்தியிருக்கின்றோம்?, எத்தனை பேர் ஒருவரைப் பற்றி மற்றவர்களுக்கு இல்லாதது பொல்லாதது சொல்லி அவர்களுக்கிடையே பிரிவினையை ஏற்படுத்தி, காட்டிக் கொடுத்து வாழ்ந்திருக்கின்றோம். எனவே இவ்வாறான வாழ்க்கை வாழாமல் இன்று எங்களுக்கும் எவ்வாறான சூழ்நிலை ஏற்பட்டாலும் யாவற்றையும் ஏற்றுக்கெண்டவர்களாக ஆண்டவராகி இயேசு எங்கள் கூடவே இருக்கின்றார், ஒருபோதும் வெட்கமடைய விடமாட்டார் என்பதை ஏற்று வாழ்வோம். "ஆண்டவராகிய தலைவர் என் கூடவே துணை இருக்கின்றார், நான் அவமானம் அடைய விடமாட்டார்" (எசா.50:7). எனவே இப்பரிசுத்த வாரத்தில் யூதாஸைப் போன்று பரிசுத்தமற்ற வாழ்க்கை வாழாது, இறைமகன் இயேசு எமது பாவங்களுக்காக பலவிதமான அவமானங்கள், பழிச்சொல்களை ஏற்று உயிர் துறந்தார் என்பதை உணர்ந்தவர்களாக, மனமாறி புதுப்படைப்பாக வாழ எங்களைத் தயார்படுத்தவோம்.